டிரெயினிங் பெண்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இப்படிப் பாதிக்கப்பட்டிருப்பதைப்பற்றி மாதர் சங்கங்களிட மிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. பொது ஐ.டி.ஐ.க்களில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களை எங்களுக்கு எங்கு இருக்கின்ற பள்ளிகளிலும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் விரும்பு கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி ஏற்பட்டுள்ள பாதிப்பை அகற்றி என்ன கோர்ஸைப் படிக்க விரும்புகிறார்களோ அந்தக் கோர்ஸை அந்தப் பெண்களுக்குக் கற்றுக்கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் அந்தக் கருத்து அரசினுடைய கவனத்திற்கு இதுவரையில் கொண்டுவரப் படவில்லை. இருந்தாலும் உறுப்பினர்கள் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்த விவரங்களை என்னிடத்திலே சொல்வார்களேயானால் அரசு ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநில அளவில் அமைக்கப்பட்டிருந்த ஆதிதிராவிடர் குழு என்ற குழு ஒன்று இயங்கி வந்தது. அந்தக் குழு 1980 ஆம் ஆண்டில் இருந்து இது வரையில் இயங்கவில்லை. அதற்குக் காரணம் என்ன? ஆதி திராவிடர் நலனைக் கவனிப்பதற்காக அடுத்த ஆண்டிலே யிருந்தாவது மாநில அளவிலே ஒரு குழுவை ஏற்படுத்த அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கயத்தாறில் சலவைத்துறை கட்டும் திட்டம்.

34—(*வினா எண். 19570) திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டபிடாரம் தொகுதியிலுள்ள கயத்தாறில் சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத் துறை கட்டும் செயற் குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன?

மாண்புமிகு திரு எம் ஆர். கோவேந்தன்: (அ) மற்றும் (ஆ): கயத்தாற்றில் சலவைத்துறை கட்டும் முன்மொழிவு பிற்பட்டோர் நல இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது பிற்பட்டோர் நல இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது என்று

1984 பிப்ரவரி 15]

கூறினார்கள். இதுபோன்றே கழுகுமலையில் 1980ஆம் ஆண்டிலே அடிக்கல் நாட்டப்பட்டும் இதுவரையிலும் சலவைத்துறை கட்டப்படவில்லை. குறிப்பாக வறட்சிக் காலங்களில் அங்கே சலவைத் தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். நாம் பல்வேறு திட்டங்களை கிராமப் புறங்களுக்கு செய்து வருகிறோம். எனவே, கயத்தாற்றில் கட்ட முன்வருகின்ற சூழ்நிலையில் எல்லவிடங்களிலும் இப்படிப்பட்ட சலவைத் துறைகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் கயத்தாறு என்னும் இடத்தில்தான் சலவைத்துறை கட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. எனவே அவை பற்றி தனியான கேள்வியினைப் போட்டால் விவரமான பதிலளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயத்தாறிலே இந்த நிதியாண்டிலேயாவது சலவைத் துறையினைக் கட்டி முடிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்கான திட்டங்களை அங்கீகரிப்பதற்காக நிர்ணயிக்கப் பட்டுள்ள சிக்கன வரம்பு.

35 (*வினா எண் 6839)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. கோ. அழகர்சாமி மற்றும் திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனத்திற்காக கட்டப்படும் அணை அமைக்கப்படவுள்ள குட்டைகள் ஆகியவைகளை அமைக்கும்பொழுது Benefit cost Ratio என்ற அடிப்படையில் பல திட்டங்கள் கைவிடப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த முறையைக் கைவிட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் திட்டங்களை அங்கீகரிப்பதற்கு சிக்கன வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சில திட்டங்கள் சிக்கன மற்றதாக இருப்பினும், தேவையான அடிப்படை மற்றும் திட்டங்கள் அமையப்பெறும் பகுதியின் பின்தங்கிய நிலை,